**மஹவெலி கால்நடை வியாபார கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை**

**அறிக்கை – 2022 / 2023**

---

வரையறுக்கப்பட்ட மஹவெலி கால்நடை வியாபார கம்பனியின் 2022 மற்றும் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள் ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தரப்பினரின் பொறுப்புக்கள்**

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட வழிகாட்டல் கைநூலின் 6.6 பந்தி பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2022 மற்றும் 2023 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை 2024 திசெம்பர் 06 திகதியளவிலும் கணக்காய்வளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | தற்போது கணக்காய்வாளரின் அறிவுரை பிரகாரம் கமநல அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கையை தயாரித்து கணக்காய்வளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**2.2 விகிதப் பகுப்பாய்வு**

கம்பனியினால் சமர்ப்பித்திருந்த 2019 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அந்த 03 ஆண்டுகளிற்குரியதாக கணிப்பிடப்பட்ட கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறு.

| | **2018** | **2019** | **2020** | **2021** |
|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.05 | 1.01 | 0.78 | 0.83 |
| விரைவு விகிதம் | 0.76 | 0.74 | 0.55 | 0.74 |
| மொத்த இலாப விகிதம் | 19% | 10.6% | (7%) | 15.5% |
| தேறிய இலாப விகிதம் | 4.16% | (5.05%) | (23.11%) | 2.42% |
| கடன்படுனர் சேகரிப்பு காலம் | 124 நாட்கள் | 126 நாட்கள் | 164 நாட்கள் | 145 நாட்கள் |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனியின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன் 2021 ஆண்டில் அந்த விகிதங்கள் ஓரளவு மட்டம் வரை அதிகரித்திருந்த போதும் சிறந்த மட்டத்தில் இல்லையென அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கம்பனியின் செயற்படு மூலதன பிரச்சினை ஒன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதங்கள் பாரியளவில் வருடா வருடம் மாற்றமடைய முக்கிய காரணமாவது கோழிக் குஞ்சிகளின் விலை மற்றும் தாய் கோழிகளிற்கு வழங்கும் உணவின் விலையின் அடிப்படையில் ஆகும். அது பண்ணைகளில் காணப்படும் சாதாரண நிலைமையாகும். | கம்பனியின் செயற்படு மூலதன தேவைப்பாட்டை சிறந்த நிலையில் பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை வீழ்ச்சியடைந்து இருந்ததுடன் 2021 ஆண்டில் அந்த விகிதங்கள் முறையே 15.5 சதவீத மற்றும் 2.42 சதவீத வளர்ச்சியை காண்பித்திருந்தது. அதன் பிகாரம் கம்பனியின் இலாப நட்ட நிலைமைகள் தொடர்சியாக வித்தியாசம் அடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது | மொத்த இலாப மற்றும் தேறிய இலாப விகிதம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வித்தியாசத்தை காட்டுகின்றன. எதிர்காலத்தில் இந்த வித்தியாசத்தை சாதாரணமாக பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதத்தை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை கடன்படுனர் திரட்டும் காலத்தில் கனிசமான வீழ்சியொன்றை காண்பித்துள்ளதுடன் 2021 ஆண்டில் அக் காலம் சில நாட்களால் குறைவடைந்துள்ள போதும் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய மீதிகளை திரட்டுவது தொடர்பாக மந்தகதியான நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது | 2018 ஆண்டின் பின்னர் கடன்படுனர் அறவிடும் செயற்பாடு சாதாரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2018 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் கடன்படுனர்களை அறவிட இயலாமைக்கு முக்கிய காரணம் அவர்கள் பற்றி எமது நிறுவனத்திடம் போதிய தகவல்கள் காணப்படாமையாகும். | கடன்படுனர் மீதியை திரட்டும் காலத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2.3 சட்டம், விதி, பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்காமைகள்

| சட்டம், விதி, பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலக்கம் 1/2021 மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பணிப்பாளர் சபை மாதத்திற்கு ஒரு முறையென வருடத்திற்கு 12 தடவைகள் கூடவேண்டியதுடன் கம்பனியின் செயலாற்றுகை தொடர்பாக வழிகாட்டல் மற்றும் செயலாற்றுகை மதிப்பீடொன்றையும் மேற்கொள்ள வேண்டிய போதும் 2019 ஆண்டு முதல் பணிப்பாளர் சபை நடாத்தப்பட்டு இருக்காததுடன் 2022 மற்றும் 2023 ஆண்டிற்காக எவ்வித பணிப்பாளர் சபை கூட்டமும் நடாத்தப்பட்டு இருக்கவில்லை. | 2019 ஆண்டு முதல் இது வரை பணிப்பாளர் சபை நியமிக்கப்படாததுடன் அதனால் பணிப்பாளர் சபை கூட்டமும் நடாத்தப்படவில்லை. தற்போது கம்பனியை கலைக்கும் நடவடிக்கைகளிற்காக மாத்திரம் தேசிய விலங்குகள் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுக்கின்றது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக கூட்டங்களை நடாத்தி ஆக்கபூர்வ தீர்மானங்களை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மைகள்.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ | இலக்கம் அப/15/0940/631/018-I மற்றும் 2015 ஜுலை 16 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் குறிப்பிட்டுள்ளவாறு இலக்கம் BD/RDS/124/CM/07 மற்றும் 2015 ஜுலை 08 திகதிய நிதி அமைச்சின் அவதானிப்பின் பிரகாரம் குறித்த சட்ட நடைமுறைகளின் கீழ் கம்பனியின் செயற்பாட்டு வினைத்திறனை உறுதி செய்ய அனைத்து வளங்கள், சொத்துக்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவத்தை தேசிய விலங்குகள் அபிவிருத்தி சபையின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் கம்பனியின் பங்குரிமையின் 27 சதவீதம் மாத்திரம் கையேற்கப்பட்டு இருந்தது. அவ்வாறாயினும் கணக்காய்வு திகதிய 2024 திசெம்பர் 06 வரையும் கையேற்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | அனைத்து சொத்துக்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவத்தை தேசிய விலங்குகள் அபிவிருத்தி சபைக்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்பாட்டிற்கு உரியதாக கலைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன் இங்கு மஹவெலி அதிகாரசபைக்கு சொந்தமான பங்குகளை சுவீகரிப்பது தொடர்பாக இரு தரப்பினரினதும் உயர் முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் மீது அது தொடர்பாக தற்போதைய நிலைமை கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுகின்றது. | அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் நிதி அமைச்சின் அவதானிப்பின் பிரகாரம் கம்பனியை கலைத்தல் மற்றும் ஒப்படைக்கும் நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | களங்குட்டிய | பண்ணை சபையின் நிதி நிலைமை மிகவும் கீழ் | நிலுவை |

| | | | |
|---|---|---|---|
| | காணிக்காக 2010 முதல் 2018 வரை ஒன்பது ஆண்டுகளிற்காக மிகை அறவீடு உள்ளடங்களாக ரூபா 10,485,000 தொகை இலங்கை மஹவெலி அதிகாரசபைக்கு செலுத்த உள்ளதாகவும் அந்த வரித் தொகையை செலுத்தி இல்லாததால் குத்தகை உரிமையை இரத்துச் செய்யவதாக RPM/T/L/CLO/ලේ/74 இலக்க மற்றும் மற்றும் 2017 ஒக்டோபர் 10 திகதிய கடிதம் மூலம் மஹவெலி அதிகாரசபையின் தங்குமிட கருத்திட்ட முகாமையாளரினால் (எச் வலயம்) அறிவித்திருந்த போதும் 2024 திசெம்பர் 06 திகதி வரை அந்த வரியை செலுத்தி இருக்காததுடன் நிதிக்கூற்றில் அதற்காக ஒதுக்கீடும் செய்திருக்கவில்லை. மேலும் அந்த குத்தகை ஆதனத்திற்காக உடன்படிக்கை செய்துள்ளதற்கான சான்றுகள் கணக்காய்வு திகதிய 2024 திசெம்பர் 06 வரையும் சமர்ப்பிக்கப்படவில்லை. | மட்டத்தில் காணப்படுவதன் காரணமாக குறித்த குத்தகை தொகையை செலுத்த முடியவில்லை. இலங்கை மஹவெலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையில் தேசிய விலங்குகள் அபிவிருத்தி சபையின் பிரதித் தலைவர், அமைச்சரவை அலுவலர்கள் மற்றும் மஹவெலி கால்நடை வியாபார கம்பனியின் முகாமைத்துவத்தின் பங்குபற்றளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் மஹவெலி அதிகாரசபைக்கு சொந்தமான பண்ணைகளிற்கு மஹவெலி கால்நடை வியாபார கம்பனியிடமிருந்து கடன் அடிப்படையில் பெற்றுக் கொண்ட புரொய்லர் கொழிக் குஞ்சிகளிற்காக அறவிட வேண்டியதாகவுள்ள ரூபா 12,057,503 தொகையை மஹவெலி, விவசாய, நீர்பாசன மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்த அனைத்து நிறுவனங்களும் நிருவகிக்கப்படுவதால், இந்த வரித் தொகையை பதிவழித்து களங்குட்டிய பண்ணையின் 25 ஏக்கர் நிலத்தை மஹவெலி அதிகாரசபைக்கு மஹவெலி கால்நடை வியாபார கம்பனிக்கு ஒப்படைக்க தீர்மானமொன்றை எடுத்ததுடன் தற்போது அதனை செயற்படுத்தும் மட்டம் மந்தகதியான மட்டத்தில் காணப்படுகின்றது. | குத்தகை தொகையான ரூபா 10,485,000 இனை மஹவெலி அதிகாரசபைக்கு செலுத்த மற்றும் நிதிக்கூற்றில் அதற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | ஏக்கர் 26 உடன்கூடிய அலுவலகம் அமைந்துள்ள பண்ணைக் காணி மஹவெலி அதிகாரசபைக்கு சொந்தமாவதுடன் காணி தொடர்பாக 1989 ஒக்தோபர் 03 திகதி முப்பது ஆண்டு குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதுடன் அதன் நிபந்தனைகளிற்கு இணங்க 2019 ஆண்டு ஒக்டோபர் 02 திகதி குத்தகை காலம் முடிவடைந்து இருந்தது. மேலும், கூட்டுத் தொகை 31,099 அடி பரப்பளவான கட்டிடம் மற்றும் 46,924 அடி பரப்பளவான கட்டமைப்பின் நிர்மாணம் மேற்கொண்டுள்ள (பெறுமதியற்ற) இந்த காணிக்குரிய உடன்படிக்கையை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் கம்பனியில் பண்ணையொன்றை நடாத்திச் செல்லுகின்ற போதும் அதிகாரசபைக்கு சொந்தமான | இக் குத்தகை காலத்தை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள எமது நிறுவனத்தின் மூலம் மற்றும் தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபையின் தலைவரினால் பல கோரிக்கை கடிதங்கள் மஹவெலி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது கம்பனி ஒப்படைக்கும் நடவடிக்கை தொடர்பாக இலங்கை மஹவெலி அதிகாரசபை மற்றும் வ/ப மஹவெலி கால்நடை வியாபார கம்பனிக்கு இடையே கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றன. | குத்தகை காலஎல்லை முடிவடைந்துள்ள காணி தொடர்பாக குத்தகை உடன்படிக்கை ஒன்றிற்கு கைச்சாத்திட அல்லது உடன்படிக்கையை நாளாதுவரையாக்க செயற்பட வேண்டும். |

நிராவீய 02 ஏக்கர் நிலம் தொடர்பாகவும் குத்தகை உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு வினைதிறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியினால் முன்வைக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம கோழிக் குஞ்சிகளின் உற்பத்தி, கோழி இறைச்சி உற்பத்தி, பன்றி உற்பத்தி மற்றும் தேங்காய் உற்பத்தி போன்ற முக்கிய 04 விடயங்களின் கீழ் எதிர்பார்த்த இலக்குகளை குறிப்பிட்டிருந்தது. அந்த எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ளும் போது கோழி இறைச்சி உற்பத்தியில் மற்றும் பன்றி உற்பத்தியின் அடைவு சதவீதம் முறையே 43 மற்றும் 17 சதவீதமான கவனிக்கத்தக்க குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | குஞ்சிகள் உற்பத்தியை எதிர்பார்த்த வாறு மேற்கொள்ள முடியாமல் போனது நாம் கோரிய பிரகாரம் நிறுவனத்தினால் தாய் விலங்கு வகை கிடைக்காததால் ஆகும். அதன் ஊடாக எதிர்பார்த்த உற்பத்தி இலக்கை அடைந்து கொள்வது கடினமானது. எதிர்பார்த்த கோழி இறைச்சி உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது அந்த ஆண்டில் புரொய்லர் குஞ்சிகளின் விலை ஒரு காலகட்டத்தில் மிகவும் உயர்ந்த மட்டத்தில் நிலவியமை ஆகும். அங்கு புரொய்லர் இறைச்சி உற்பத்தியை விடவும் குஞ்சிகளின் விற்பனை மிகவும் இலாபகரமான காரணத்தால் இறைச்சி உற்பத்திக்காக ஈடுபடுவதன் கவனம் குறைக்கப்பட்டது. 2023 ஆண்டில் அதிக காலம் நிலவிய விலையின் அதிகரிப்பு மற்றும் விலை நிலையாக காணப்பட்டதால் எதிர்பார்த்த உற்பத்தியை நோக்கி செல்லவில்லை. | எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 மற்றும் 2023 ஆண்டிற்கான அங்கீகார ஊழியர் எண்ணிக்கை மற்றும் உண்மையான ஊழியர் எண்ணிக்கை 20 பேர்கள் என முன்வைத்திருந்த போதும் அந்த ஊழியர்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அது எம்மால் ஏற்பட்ட தவறாகும். விரிவான தகவல்களை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். | ஊழியர்கள் தொடர்பான தகவல்களை நாளாதுவரையாக பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4. பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பந்தி பிரகாரம் கம்பனியினால் குறைந்தபட்சம் மூன்று மாத காலத்திற்காக பிரதான பெறுகைகள் திட்டத்தை தயாரித்து அதன் பின்னர் எதிர்வரும் ஆண்டிற்கான பெறுகைகள் நடவடிக்கைகள் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் உள்ளடங்களாக பிரதான பெறுகைகள் திட்டத்தை ஆறு மாதங்களிற்கு அதிகரிக்காத காலத்தினுள் நிதமும் நாளாதுவரையாக்கப்பட்ட பெறுகைகள் திட்டமொன்றை சபையினால் தயாரிக்க வேண்டிய போதும் அவ்வாறான விடயங்களை உள்ளடக்கிய பெறுகைகள் திட்டமொன்றை 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளிற்காக தயாரித்திருக்கவில்லை. | 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. 2024 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டிற்காகவும் இடையறாது பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 17 திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நல்லாளுகைக்கான வழிகாட்டல் கைநூலின் 4 ஆம் அத்தியாயத்தின் 1.2 (ஏ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு 3 மாதத்திற்கும் ஒரு முறை கணக்காய்வுக் குழு நடாத்த வேண்டுமெனவும் அதன் போது எடுக்கப்படும் பரிந்துரைகள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்ட போதம் சபையினால் 2022 மற்றும் 2023 ஆண்டுகளிற்கு உரியதாக கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆண்டின் இறுதிக் காலப் பகுதி முதல் எமது கம்பனிக்கு பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்படாததுடன் அன்றிலிருந்து இது வரை நிறுவனத்திற்கு பணிப்பாளர் சபையொன்று இல்லை. அவ்வாறே முகாமைத்துவ குழுக் கூட்டமும் நிறுவனத்திற்காக நடாத்தப்படவில்லை. | நல்லாளுகைக்கான வழிகாட்டல் கைநூலின் 4 ஆம் அத்தியாயத்தின் 1.2 (ஏ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு 3 மாதத்திற்கும் ஒரு முறை கணக்காய்வுக் குழு நடாத்த வேண்டும். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலக்கம் 01/2014 மற்றும் 2014 பெப்ரவரி 17 திகதிய அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 சுற்றறிக்கையுடன் சமர்ப்பித்த பொது முயற்சிகள் மீதான நல்லாளுகைக்கான வழிகாட்டலின் பிரகாரம் கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் உத்தேச இலக்குளை அடைந்து கொள்ள முடியுமானவாறு முயற்சியை வழிநடாத்த நிதி ஆண்டு ஆரம்பிக்க 15 நாட்களிற்கு முன்னர் தயார்க்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தை பணிப்பாளர் சபை அங்கீகரித்த பின்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம். பொது திறைசேரி மற்றும கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2022 மற்றும் 2023 ஆண்டுகள்மேவுகை செய்யப்படும் வகையில் கூட்டிணைந்த திட்டமொன்றை கணக்காய்வு திகதிய 2024 திசெம்பர் 06 வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்து இருக்கவில்லை. | வ/ப மஹவெலி கால்நடை வியாபார கம்பனிக்கு 2019 ஆண்டிலிருந்த இதுவரை பணிபாளர் சபையொன்று நியமிக்கப்படாததுடன் 2022/2023 ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. எதிர்வரும் ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டமொன்றை தயார்க்க நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் இந்த திட்டம் கணக்காண்டு ஆரம்பிக்க 15 நாட்களிற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.3 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலக்கம் 01/2014 மற்றும் 2014 பெப்ரவரி 17 திகதிய அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் நிதியாண்டில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் வணிக நடவடிக்கைகள் உள்ளிட்ட செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க வேண்டியதுடன் அதற்கு வருடாந்த வரவு செலவு திட்டம் உத்தேச பிரதான முதலீடுகள், கொள்ளவு விரிவாக்கல்கள் மற்றும் முக்கிய பெறுகைகள் உள்ளிட்ட வருடாந்த பெறுகைகள் திட்டம், மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் ஆகிய தகவல்கள் உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டிய போதும் கம்பனியினால் 2022 ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்காததுடன் | 2022 /2023 ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்காததுடன் 2024 ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்துள்ளதுடன் 2025 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தை உரிய திகதியல் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

2023 ஆண்டிற்காக சுற்றறிக்கை பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தை கணக்காய்வு திகதிய 2024 திசெம்பர் 06 வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 1/2021 மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 பந்தி பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு திட்டத்தை வருடம் ஆரம்பிக்க 15 நாட்களிற்கு அதிகரிக்காத காலத்தினுள் வரிசை அமைச்சுக்கு, பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு பொது திறைசேரிக்கு மற்றும் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2022 ஆண்டிற்காக பாதீட்டுத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | 2019 ஆண்டின் இறுதிக் காலப் பகுதி முதல் எமது கம்பனிக்கு பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்படவில்லை. அதனால் பாதீட்டை தயாரித்தல் மற்றும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2030 ஆண்டளவில் தமது அமைக்குரிய அனைத்து நடாடுகளினதும் பொருளாதார விருத்தி மற்றும் சமூக விருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சி நிரலை அறிமுகம் செய்திருந்த போதும், கம்பனியினால் அதற்கும் பொருந்தும் வகையில் முறையாக தயாரிக்கப்பட்ட எதிர்பார்த்த நோக்கம், இலக்குகள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அது தொடர்பாக கவனம் செலுத்தி செயற்பட நடவடிக்கை எடுக்கிறேன். | நிலைபேறான நிகழ்ச்சி நிரலிற்கு பொருந்தும் வகையில் எதிர்பார்த்த நோக்கம், இலக்குகள் மற்றும் சுட்டிகளை இனங்காண வேண்டும். |

## 4.6 வருடாந்த அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 1/2021 மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வரைவு | 2020/2021 ஆண்டிற்குரிய வருடாந்த கணக்குகள் தேசிய கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கண்கதை தாமதமின்றி தயாரித்து கணக்காய்விற்கு |

| | | |
|---|---|---|
| வருடாந்த அறிக்கையை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வு திகதிய 2024 திசெம்பர் 06 திகதி வரையும் கணக்காய்விற்கு சமர்ப்பித்து இருக்கவில்லை. | 2021/2022 மற்றும் 2022/2023 வருடாந்த கணக்குகளின் வரைவு கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்கை சமர்ப்பிக்க முடியாமைக்கு காரணமாவது பணிப்பாளர் சபையொன்று இல்லாததாகும். தற்போது தேசிய கணக்காய்வு பிரிவின் அறிவுரை பிரகாரம் கமநல அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் தேசிய கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படும். | சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |